# அலகு - 1

# அகத்திணையியல்

முனைவர் ரா. ரேவதி,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு மகளிர்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
விழுப்புரம் - 605 401.

# நம்பி அகப்பொருள்

பார்வை நூல் :

முனைவர் ச. திருஞானசம்பந்தம்

முனைவர் ரா. ரேவதி,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை.

டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விழுப்புரம்

மூன்றாம் ஆண்டு - ஐந்தாம் பருவம்

நம்பி அகப்பொருள் - பாடக் குறிப்புகள்

அலகு-1 - அகத்திணையியல்

1.0 நூற்குறிப்பு : முன்னுரை.

அகப்பொருள் இலக்கணத்தைச் சிறப்பித்துக் கூறும் நூல்களுள் முதன்மையானதாகப் போற்றப் பெறுவது நம்பி அகப்பொருள் என்னும் நூலாகும். இந்நூல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தையும் சங்க அகச்செய்யுட்களையும் பின்பற்றி இயற்றப்பட்டது. இந்நூலின்கண் காணப்படும் இலக்கண விதிகள் ஆசிரியப்பாவை ஒட்டிய நூற்பா யாப்பில் அமைக்கப்பட்டுள்ளன. ~~[illegible]~~

நூல் அமைப்பு :

இந்நூல் ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது. அவை;
1. அகத்திணையியல், 2. களவியல் 3. வரைவியல் 4. கற்பியல் 5. ஒழிபியல்

பெயர்க்காரணம் :

அகப்பொருள் இலக்கணத்தைப் பற்றிக் கூறுவதாலும், ஆசிரியர் பெயர் நம்பி என்பதாலும் நம்பி அகப்பொருள் என்றானது.

1.1. ஆசிரியர் குறிப்பு :

இயற்பெயர் : நம்பி.

சிறப்புப்பெயர் : நாற்கவிராச நம்பி. [ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்கு வகைக் கவிதைகளையும் இயற்ற வல்லவர் ஆதலின்.]

தந்தை பெயர் : உய்யவந்தான்

ஊர் : தென்பாண்டி நாட்டில் உள்ள புளியங்குடி.

சமயம் : சமணம்

மொழிப்புலமை : வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் வல்லவர்

காலம் : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

1.1.1 நால்வகைக் கவிதைகள் பற்றிய விளக்கம்:

1. ஆசுகவி - கொடுத்த பொருளை அடுத்த பொழுதில் பாடும் பாட்டு.
[காளமேகப்புலவரின் பாடல்களைச் சான்றாகக் காட்டலாம்.]
2. மதுரகவி - இனிமைப் பெருகப்பாடும் பாட்டு. சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியன.
[மதுரகவி யாழ்வாரின் பாடல்கள்].

3. வித்தார கவி – 1. வித்தாரம் என்றால் வக்கணையாகப் பாடுதல்.
2. தொடர்நிலைச் செய்யுளாக அமைப்பது.
3. பொய்யை மெய்யாக்கி, மெய்யைப் பொய்யாக்கிப் பாடுதல்.

4. சித்திரக் கவி – ஓவியத்துக்குள் உள்ளடக்கிப் பாடும் பாட்டு.

இந்நான்கு கவிதைகளையும் பாடவல்லவர்களைப் "பெரும் புலவர்" என்று பிங்கல நிகண்டத்தார் புகழ்கின்றார். இவ்வாறு பாடுவதில் வல்லவர் திருமங்கை ஆழ்வார்.

1.1.2 சிறப்புப் பாயிரத்தின் உறுப்புகள் பொருந்தும் முறை:

1. ஆக்கியோன் பெயர் : நம்பி
2. வழி : தொல்காப்பிய வழிநின்ற சார்புநூல்
3. எல்லை : வடவேங்கடம், தென்குமரி அகத்து.
4. நூற்பெயர் : அகப்பொருள் விளக்கம்
5. யாப்பு : தொகை, வகை, விரி.
6. நுதலிய பொருள் : அகப்பொருள்
7. கேட்போர் : கற்றுவல்லோர்
8. பயன் : வீடு, பேறு.
9. காலம் : பாண்டியன் குலசேகரன் காலம்
10. களம் : பாண்டியன் அவைக்களம்
11. காரணம் : கிளவிகளை அடைவுபடக் கோத்தல்.

1.1.3. பொருள் இலக்கணம்:

செம்மொழியாம் தமிழ்மொழி இலக்கிய வளம் நிறைந்த மொழி. அவ்விலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை இலக்கண நூல்கள். அவை, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தையும் பற்றிப் பேசுவன. இவ் ஐவகை இலக்கணங்களையும் பற்றிப் பேசும் நூல் தொல்காப்பியம் ஆகும். இவற்றுள் பொருள் இலக்கணம் என்பது வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதாகும். இது தமிழ்மொழிக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

பொருள் இலக்கணம் அகம், புறம் என்னும் இருகூறுகளை உடையது.

அகம் – ஒழுக்கம் (அகப்பொருள்)

தலைவன், தலைவியின் இன்பம் பற்றிப் பேசுவது.

"ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம்முள் கூடிப்பெற்ற இன்பத்தைப் பற்றி இவ்வாறு இருந்தது என்று பிறருக்குக் கூறமுடியாததாய் தாமே உணர்ந்து மகிழ்தக்கது."

இது அகத்தே நிகழும் காரணம் பற்றி 'அகம்' எனப்பட்டது.

புறம் – விளக்கம்: (புறப்பொருள்)

தனிமனிதனின் கல்வி, ஈகை, புகழ், வீரம் போன்றவற்றைப்பற்றி பிறருக்கு புரியும்படியாக எடுத்துரைப்பது. பிறரிடம் பகிர்ந்துகொள்ளக் கூடியதாய் அமைவது.

இது புறத்தே நிகழும் காரணம் பற்றி 'புறம்' எனப்பட்டது.

1.2. **அலகு : 1** – அகத்திணையியல்.

மனித வாழ்வின் மேன்மைக்கு உறுதி பயக்கும் பொருட்கள் நான்கு. அவை: அறம், பொருள், இன்பம், வீடு. இவற்றுள் இன்பம் என்பது இல்லற வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவதாகும். அவ் இன்பமே அகத்திணை எனப்படுகிறது. அகத்திணைக்கு உரிய செய்திகளைப் பற்றி விளக்கிக் கூறுவதால் 'அகத்திணையியல்' எனப்பட்டது. இதன்கண் அமைந்த நூற்பாக்கள் 116.

1.2.1 அகப்பொருளின் வகைகள்: (7)

அகப்பொருள் ஏழு கூறுகளை உடையதாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. அவை; 1. கைக்கிளை 2. ஐந்திணை 3. பெருந்திணை.

ஐந்திணை என்பது 1. குறிஞ்சி 2. முல்லை, 3. மருதம் 4. நெய்தல் 5. பாலை.

1.2.2 அகப்பொருளைச் சொல்லும் முறை: (2)

1. புனைந்துரை – மிகைப்படுத்திக் கூறுதல்
2. உலகியல் – உள்ளது உள்ளபடி கூறுதல்.

1.2.3 கைக்கிளை : இலக்கணம்.

கை + கிளை – கை என்றால் சிறுமை; கிளை என்றால் உறவு சிறுமையான உறவு. அதாவது ஒருதலைக் காமம். ஒருபக்கக் காதல்

கைக்கிளை, 1. ஆண்பாற் கைக்கிளை
2. பெண்பாற் கைக்கிளை

என இரு வகைப்படும்.

1.2.4 ஐந்திணை : இலக்கணம்.

ஐந்திணை என்பது அன்புடைக் காமம். ஐவகை நிலத்திற்கேற்பத் தோன்றும் ஒழுக்கமாகும். ஒத்த தலைவன் தலைவியரிடத்தில் தோன்றுவது.

1.2.5 பெருந்திணை : இலக்கணம்.

பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் ஆகும். ஒப்புமையில்லாத தலைவன், தலைவியிடத்தில் தோன்றுவது.

குறைந்த வயதுடைய பெண்ணும் மிகுந்த வயதுடைய ஆணும், மிகுந்த வயதுடைய பெண்ணும் குறைந்த வயதுடைய ஆணும் கூடுவது.

1.3 ஐந்திணைக்கு உரிய பொருள்கள் : (3)

1. முதற்பொருள் 2. கருப்பொருள் 3. உரிப்பொருள்

1.3.1 முதற்பொருள் : இலக்கணம் மற்றும் வகை.

முதற்பொருள் என்பது அடிப்படையான பொருளாகும். கருப்பொருட்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைவதால் முதற்பொருள் எனப்பட்டது.

முதற்பொருள் இரண்டு வகைப்படும். அவை, 1. நிலம் 2. பொழுது.

முதற்பொருள் (2)

| 1. நிலம் | 2. பொழுது | |
|---|---|---|
| | சிறுபொழுது - 5 (ஒரு நாளைப் பகுப்பு) | பெரும்பொழுது - 6 (ஓர் ஆண்டின் கூறுகள்) |
| 1. வரை (மலை) மலையும் மலை சார்ந்த இடமும் (குறிஞ்சி) | மாலை - (2 pm - 10 pm) - 8 மணிநேரம் | கார்காலம் - ஆவணி, புரட்டாசி |
| 2. சுரம் (மணல்) மணலும் மணல் சார்ந்த இடமும் (பாலை) | யாமம் - (10 pm - 2 am) - 4 மணிநேரம் | கூதிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை |
| 3. புறவு (காடு) காடும் காடு சார்ந்த இடமும் (முல்லை) | வைகறை (2 am - 6 am) - 4 மணிநேரம் | முன்பனிக்காலம் - மார்கழி, தை |
| 4. பழனம் (வயல்) வயலும் வயல் சார்ந்த இடமும் (மருதம்) | காலை (6 am - 10 am) - 4 " | பின்பனிக்காலம் - மாசி, பங்குனி |
| 5. திரை (கடல்) கடலும் கடல் சார்ந்த இடமும் (நெய்தல்) | நண்பகல் - (10 am - 2 pm) - 4 " | இளவேனிற்காலம் - சித்திரை, வைகாசி |
| | 24 மணிநேரம் | முதுவேனிற்காலம் - ஆனி, ஆடி. |
| | குறிப்பு: சிறுபொழுது என்பது நாழிகை பத்தாகும். ஒரு நாழிகை என்பது 24 நிமிடமாகும். 60 நாழிகை கொண்ட ஒரு நாளைத் தொல்காப்பியர் ஆறு சிறுபொழுதுகளாகப் பகுத்துள்ளார். இதுவே பொருந்தமுடையதாகும். | |

1.7 திணைகளுக்குரிய பொழுதுகள்:

| திணை | பெரும்பொழுது | | சிறுபொழுது |
|---|---|---|---|
| | சிறப்பிற்குரியது | சிறப்பற்றது | |
| 1. குறிஞ்சி | கூதிர்காலம் | முன்பனிக்காலம் | யாமம் |
| 2. பாலை | வேனிற்காலம் | பின்பனிக்காலம் | நண்பகல் |
| 3. முல்லை | கார்காலம் | – | மாலை |
| 4. மருதம் | அறுவகைப் பெரும்பொழுதுகள் | – | வைகறை |
| 5. நெய்தல் | அறுவகைப் பெரும்பொழுதுகள் | – | எற்படுகாலை |

1.3.2 கருப்பொருள்: இலக்கணம்

முதற்பொருளை அடிப்படையாகக்கொண்டு பிறக்கும் பொருட்கள் கருப்பொருள் எனப்படும். இயற்கையாக அமைந்த பொருட்கள் கருப்பொருட்கள் ஆகும்.

1.3.3 கருப்பொருள் வகை: 14

கருப்பொருள் 14 வகைப்படும். அவை, 1. தெய்வம் 2. உயர்ந்தோர் 3. அல்லோர் 4. புள் (பறவை) 5. விலங்கு 6. ஊர் 7. நீர் 8. பூ 9. மரம் 10. உணவு 11. பறை 12. யாழ் 13. பண் 14. தொழில்

திணைமயக்கம்:

ஒரு நிலத்தில் காணப்படும் கருப்பொருள் பிற நிலத்தில் காணப்படாது. அப்படிக் காணப்படின் அதனைத் திணைமயக்கம் என்பர்.

ஐந்திணைக்கும் உரிய கருப்பொருட்கள்:

| வ.எண் | கருப்பொருள் | குறிஞ்சிநிலம் | பாலைநிலம் | முல்லைநிலம் | மருதநிலம் | நெய்தல்நிலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெய்வம் | முருகன் | கொற்றவை, துர்க்கை | திருமால் | இந்திரன் | வருணன் |
| 2. | உயர்ந்தோர் | பொருப்பன், வெற்பன், இறைத்தி | விடலை, காளை, மீளி, எயிற்றி | குறும்பொறை நாடன், தோன்றல், கிழத்தி | ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி | சேர்ப்பன், புலம்பன், பரத்தி |
| 3. | அல்லோர் | குறவர், கானவர், குறத்தியர் | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் | உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர் | பரதர், பரத்தியர் |
| 4. | புள் | கிளி, மயில் | புறா, பருந்து, எருவை, கழுகு | காட்டுக்கோழி | நாரை, அன்னம், பெருநாரை, குருகு | கடற்காகம் |
| 5. | விலங்கு | புலி, கரடி, யானை, சிங்கம் | செந்நாய் | மான், முயல் | எருமை, நீர்நாய் | சுறாமீன் |
| 6. | ஊர் | சிறுகுடி | குறும்பு | பாடி | பேரூர், மூதூர் | பாக்கம், பட்டினம். |
| 7. | நீர் | அருவிநீர், சுனைநீர் | நீரில்லாக் கிணறு | குறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர். | ஆற்றுநீர், கிணற்று நீர், குளத்து நீர். | உவர்நீர்க் கேணி. |
| 8. | பூ | வேங்கைப்பூ, குறிஞ்சி, காந்தள் | குராஅம்பூ, மராஅம்பூ. | முல்லை, தோன்றி, பிடவம். | தாமரை, கழுநீர், குவளை | நெய்தல், தாழம்பூ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | மரம் | சந்தனம், தேக்கு அகில், அசோகு, வேங்கை | பாலை, உழிஞை | கொன்றை, காயா | மருதம், வஞ்சி, காஞ்சி | புன்னை, ஞாழல் |
| 10 | உணவு | மலைநெல், மூங்கில் அரிசி, தினை | வழியாற் பறித்தபொருள், ஊர்களில் கொள்ளையடிப்பட்ட பொருட்கள். | வரகு, சாமை, முதிரை | செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி. | மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள் |
| 11 | பறை | தொண்டகப் பறை | துடிப்பறை | ஏறுகோட்பறை | நெல்லரிப் பறை மணமுழவு | மீன்கோட்பறை நாவாய்ப்பம்பை |
| 12 | யாழ் | குறிஞ்சியாழ் | பாலையாழ் | முல்லையாழ் | மருத யாழ் | விளரியாழ் |
| 13 | பண் | குறிஞ்சிப்பண் | பஞ்சுரப்பண் | சாதாரிப்பண் | மருதப்பண் | செவ்வழிப் பண் |
| 14. | தொழில் | மலைநெல் விதைத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் அருவிநீராடல் | போர்செய்தல், சூறையாடுதல் | வரகு, சாமை விதைத்தல் அவற்றின் களைகட்டல், அரிதல், குழலூதல், ஏறுதழுவுதல். | நெல்லரிதல், குளம் குடைதல், புதுநீராடல் | மீன்பிடித்தல், உப்பு உண்டாக்கல், உப்பு விற்றல் கடலாடல், மீன் உணக்கல் |

1.3.4. உரிப்பொருள் : இலக்கணம்.

உரி என்பது ஒழுக்கமாகும். அந்தந்த நிலத்திற்குரிய உயர்ந்த மக்களிடத்துக் காணப்படும் ஒழுக்கமே உரிப்பொருள் எனப்படும். அவை;

1. புணர்தல் - தலைவன், தலைவி ஆகிய இருவரும் கூடுவது - (குறிஞ்சி)
2. பிரிதல் - தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல், தலைவியொடு சேர்ந்து தமைப் பிரிதல் - (பாலை)
3. இருத்தல் - தலைவன் பிரிந்துச் சென்ற இடத்து தலைவி பொறுத்துக்கொள்ளுதல். தலைவி தன் மனதை ஆற்றி இருத்தல் - (முல்லை)
4. ~~இரங்கல்~~ ஊடல் - தலைவனின் புறத் தொழுக்கத்தால் தலைவிக்கு ஏற்படும் மனவேறுபாடு. - (மருதம்)
5. இரங்கல் - பிரிந்துச் சென்ற தலைவனின் நினைந்துத் தலைவி வருந்தியுக் கலங்கிப் புலம்புதல் - (நெய்தல்)

இவ் ஐவகை ஒழுக்கங்களோடு அதற்கான காரணங்களும் உரிப்பொருள் எனப்படும். நிமித்தம் என்பது காரணம் எனப் பொருள் படும்.

1.4. கைகோள் (ஒழுக்கம்) : இலக்கணம்.

அகவாழ்வில் தலைவனும் தலைவியும் மேற்கொள்கின்ற ஒழுக்கம் கைகோள் எனப்படும்.

1.4.1. கைகோள் : வகை

கைகோள் இரண்டு வகைப்படும். அவை; 1. களவு (மறைவான ஒழுக்கம்) 2. கற்பு (இல்லற வாழ்க்கை)

1.5. களவுப் புணர்ச்சியின் வகைகள் ; (4)

1. இயற்கைப் புணர்ச்சி 2. இடந்தலைப்பாடு 3. பாங்கற் கூட்டம் 4. பாங்கியிற் கூட்டம்.

அ. இக்களவுப் புணர்ச்சிக்குமுன் கைக்கிளை நிகழ்தல் வேண்டும்.

ஆ. கைக்கிளைக்குரிய தலைமக்கள் நால்வர். 1. மறையோர் 2. மன்னவர் 3. வணிகர் 4. சூத்திரர் (வேளாளர்).

இ. கைக்கிளைக்குரிய பிறர் - இழிந்தோரில் உயர்ந்தோர்.

1.5.1 இயற்கைப் புணர்ச்சி: இலக்கணம் மற்றும் வகை.

தலைவனும் தலைவியும் தலைவிதியால் தாமே கூடுதல் இயற்கைப் புணர்ச்சி எனப்படும். இப்புணர்ச்சி இரண்டு வகைப்படும். அவை,

1. தெய்வத்தான் நிகழ்வது — முயற்சியின்றி முடியும்.
2. தலைவியால் நிகழ்வது — மருந்து முயற்சிக்குப் பின்னர் முடியும்.

1.5.2 இடந்தலைப்பாடு:

தலைவனும் தலைவியும் குறித்த இடத்தில் தலைப்படுதல்.

1.5.3 பாங்கற்கூட்டம்:

பாங்கனால் தலைவனும் தலைவியும் கூடும் கூட்டம்.

1.5.4 பாங்கியற் கூட்டம்:

பாங்கியால் தலைவனும் தலைவியும் கூடும் கூட்டம்.

1.5.5 களவுப் புணர்ச்சியால் நிகழும் அருக்கள்: (2)

களவுப்புணர்ச்சியால் இருவகையான அருக்கள் நிகழும். அவை:

1. உள்ளப் புணர்ச்சி: ஒப்பும் உயர்வும் அற்ற தலைமகன் பெருமையும் உரனும் பெற்றவன். தலைவி அச்சம், நாணம், மடன் ஆகிய குணங்கள் நீங்காதவள். இத்தகைய குணங்கள் பெற்ற தலைவன், தலைவிக்கு உள்ளப் புணர்ச்சி நிகழும். இது மெய்யுறு புணர்ச்சிக்குமுன் நிகழும்.

2. மெய்யுறு புணர்ச்சி: தலைவனும் தலைவியும் உள்ளத்தால் ஒன்றி நிற்பவர்கள். அவ்விருவருள் ஒருவராகிய தலைவன் தலைவியினுடைய உடம்பைத் தொட்டுப் பழகுதல் மெய்யுறு புணர்ச்சி எனப்படும்.

இந்நிலை பெரும்பாலும் இல்லை. காரணம், இந்நிலை தமிழ்ப் பண்பாட்டிற்கு மாறானதாகும்.

2.3. மெய்யுறு புணர்ச்சிக்குரிய காலம்:

பத்து வகை அவத்தைகள் அருகே நிகழ்ந்த பின்னரே மெய்யுறு புணர்ச்சி நிகழும். பத்து அவத்தைகளாவன:

1. காட்சி — தலைவன் தலைவனைத் தனியிடத்துக் காணல்.
2. வேட்கை — தலைவியைப் பெற வேண்டும் என்ற உள்ளக் குறிப்பு
3. ஒருதலை உள்ளுதல் — இடைவிடாது நினைத்தல்
4. மெலிதல் — உண்ணாமையால் உடல் மெலிதல்.
5. ஆக்கம் செப்பல் — தன்னிடத்துத் தோன்றிய வருத்த மிகுதியைப் பிறரிடம் கூறுதல்
6. நாணுவரை இறத்தல் — நாணத்தின் எல்லையைக் கடத்தல்.
7. நோக்குவ எல்லாம் அவையே போறல் — காணும் பொருளில் எல்லாம் காதலிக்கப் பட்டாளைக் காணல்.

8. மறத்தல் – இயல்பான செயல்களை மறந்து அறிவு திரிதல்.
9. மயக்கம் – செய்வது தெரியாமல் புலம்புதல்.
10. சாக்காடு – இறந்து படலாமா? என்று புலம்பும் நிலைமை அடைதல்.

1.6. குறி – இலக்கணம் மற்றும் வகை.

'குறி' என்றால் இடம். களவுப் புணர்ச்சிக்காகக் குறிக்கப்படும் இடமே குறி எனப்படும். இது தலைவியாலோ தோழியாலோ குறிக்கப்படுவதாகும்.

குறி 2 வகைப்படும். அவை;

1. பகற்குறி – இல்லத்தின் எல்லையைக் கடந்தது.
2. இரவுக்குறி – இல்லத்தின் எல்லையைக் கடவாதது.

1.6.1 களவுப் பிரிவின் இலக்கணம் மற்றும் வகை:

களவொழுக்கத்தில் கூடிய தலைவன் சில காரணங்களால் தலைவியைப் பிரிந்துச் செல்லுதல் களவுப் பிரிவு எனப்படும்.

களவுப் பிரிவு 2 வகைப்படும். அவை;

1. ஒருவழித் தணத்தல்
2. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

1.6.2. ஒருவழித் தணத்தல்:

ஊர் உறவுக்குள்ளோ ஒரு நாட்டிற்குள்ளோ தலைவன் பிரிந்துச் செல்லுதல் ஒருவழித் தணத்தல் எனப்படும். காதல் பற்றி ஊரார் பேசும் அலரைக் குறைப்பதற்காகத் தலைவன் தலைவியைச் சிலநாள் காண வாராதிருத்தல். பருவ வரையறை இல்லை.

1.6.3. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

திருமணம் செய்து கொள்ளக் கருதிய தலைவன் பெரும்பொருள் சேர்த்து வருவதற்காகக் காடுகளையும் நாடுகளையும் கடந்து பல நாள் பிரிதல். இப்பிரிவிற்குரிய கால வரையறை இரண்டு திங்களைக் கொண்ட ஒரு பருவத்திற்கு உட்பட்ட காலமாகும். (59 நாட்கள்)

1.7. வரைவு : இலக்கணம்

தலைவனுக்கும் தலைவிக்கும் நடைபெறும் திருமணம் வரைவு எனக் கூறப்பெறும். வரைதல் – இன்னவளுக்கு இன்னவன் உரிமையுடையவன் எனப் பலருக்கும் அறிவிக்கின்ற நிகழ்ச்சி வரைதல் என்று பொருள்படும். வரையறை செய்தலால் வரைதல் என்பது காரணப்பெயர்.

1.7.1. வரைவு நிகழும் காலம்:

வரைவாகிய திருமணம்,

1. களவு வெளிப்படாமுன்
2. களவு வெளிப்பட்டபின்

என்னையும் நெறியினை உடையது.

2.6.1.3 களவு வெளிப்படாமுன் வரைதல்
1. தலைவன் தானே தெளிவு பெற்று வரைதல்
2. பாங்கன், பாங்கியால் அறிவுறுத்தப்பட்டு வரைதல்

2.6.2.4 களவு வெளிப்பட்டபின் வரைதல்:
1. உடன்போய் வரைதல்
2. மீண்டு வந்து தம் ஊரின்கண் வரைதல்
3. உடன்போக்கு இடையீடு உற்று வரைதல்.

2.6.2.5 உடன்போய் வரைதல் : இலக்கணம்
தலைவன் பிறர் அறியாதபடி தலைவியை உடன் அழைத்துச் சென்று வரைதல். இந்நிகழ்வு தலைமகன் தம் ஊரின்கண் வரைதலாகும்.

2.6.2.6 மீண்டு வரைதல்: இலக்கணம்
உடன்போக்கு மேற்கொண்ட தலைவனைத் தலைவியும் இனி பெற்றோரை நினைவாய்ப்பில்லை என்று உறுதிகொண்டு மீண்டு வந்து தலைவன் வீட்டிலோ தலைவி வீட்டிலோ திருமணம் செய்வது.

1.8. அறத்தொடு நிற்றல் : இலக்கணம்
தலைவி தன் களவைத் தோழிக்கும் பிறருக்கும் முறையே வெளிப்படுத்தி நிற்றலே அறத்தொடு நிற்றல் எனப்படும்.

3.1. அறத்தொடு நிற்றலுக்கான காரணம்:
1. ஆற்று ஊறு அஞ்சுதல் – தலைவன் வரும் வழியை எண்ணித் தலைவி அஞ்சுதல்
2. அவன் வரைவு மறுத்தல் – தலைவன் வரைவினைத் தலைவியின் பெற்றோரும் உறவினரும் ஏற்க மறுத்தல்.
3. வேற்று வரைவு நேர்தல் – பிறர் வரைவினைத் தலைவியின் பெற்றோர் உடன்படுதல்.
4. காப்புக்கை மிகுதல் – தலைவிக்கு வீட்டுக்காவல் மிகுதியாதல்.

1.8.2) அறத்தொடு நிற்கும் முறை:
தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய நால்வரும் அறத்தொடு நிற்பார்கள்.
1. தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்பாள்
2. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பாள்

3. செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள்
4. நற்றாய் தந்தை மற்றும் தன் ஐயர்க்கு (உடன்பிறந்தோர்) அறத்தொடு நிற்பாள்.

1.8.2. தலைமகள் அறத்தொடு நிற்கும் இடம்: (4)

1. தலைவன் ஒருவழித் தணத்தல்
3. தலைவியைக் காணவரும் தலைவனைச் செவிலி காணல்
2. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்
4. தலைவிக்குக் காவல் மிகுதல்.

இந்நான்கு காரணங்களால் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்பாள்.

1.8.3. தோழி அறத்தொடு நிற்கும் இடம்: (2)

1. முன்னிலைப் புறமொழி
2. முன்னிலை மொழி

முன்னிலைப் புறமொழி : இலக்கணம்

தலைவியின் களவு நிலையைப் பற்றி நேரடியாகக் கூறாமல் பிறரை நோக்கி (முன்னிலையாய் நிற்கின்றவரை நோக்கி) கூறுவது போலக் குறிப்பால் கூறுதல்.

முன்னிலை மொழி : இலக்கணம்

தலைவியின் களவு நிலையைப்பற்றித் தோழி செவிலித்தாயிடம் நேரடியாகக் கூறுதல்.

1.8.4. செவிலி அறத்தொடு நிற்கும் இடம்:

தலைவியின் நிலையைப் பற்றி செவிலித்தாய் நற்றாயிடம் வெளிப்படையாக எடுத்துரைப்பாள்.

1.8.5. நற்றாய் அறத்தொடு நிற்கும் இடம்:

நற்றாய் தலைவியின் நிலையைப்பற்றி தந்தை, தன் உடன் பிறந்தோர்க்குக் குறிப்பால் உணர்த்துவாள்.

1.9. கற்பு: இலக்கணம்

தலைவன் தலைவியர்க்கு இல்வாழ்க்கை அமையும் முறையே கற்பாகும்.

இல்லறச் சிறப்பு:

தலைவியும் தலைவனும் அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்புதல், துறவிகளைப் போற்றுதல், விருந்தினர்களை எதிர்கொள்ளுதல் ஆகிய செயல்களைச் செய்வதற்குத் துணைநிற்பது கற்புநெறியாகிய இல்லறத்தின் சிறப்பாகும்.

1.9.1 கற்பின் வகைகள் : (2)

1. களவின் வழி வந்த கற்பு.
2. களவின் வழி வாராக் கற்பு.

1.9.2. கற்பிற்குரிய பிரிவுகள் : (6)

தலைவனும் தலைவியும் கூடி நடத்தும் இல்வாழ்க்கையில் தலைவன் தலைவியைப் பிரிந்துச் செல்வதுவே கற்பில் பிரிவு எனப்படும். அவை;

1. பரத்தையிற் பிரிவு 2. ஓதற்குப் பிரிவு, 3. காவல் பிரிவு, 4. தூதிற்பிரிவு 5. துணைவயிற் பிரிவு 6. பொருள்வயிற் பிரிவு.

இப்பிரிவுகளையும், உரியாரையும், உரிய காலத்தையும் பின்வரும் அட்டவணை வழிக் காணலாம்.

I

| வ.எண் | பிரிவின் வகைகள் | பிரிவிற்கு உரியார் | உரிய காலம். |
|---|---|---|---|
| 1. | ஓதற்பிரிவு | | |
| | அ) வேதம் ஓதுதல் | அரசர், அந்தணர், வணிகர் | மூன்று ஆண்டு |
| | ஆ) வேதம் அல்லாக் கல்வி | அனைவரும் உரியர் | மூன்று ஆண்டு |
| | இ) படைக்கலப் பயிற்சி | அந்தணர், அரசர், வணிகர் | மூன்று ஆண்டு |
| | ஈ) பகைவரை உணர்தல் | அரசர், வணிகர் | மூன்று ஆண்டு |
| 2. | காவற்பிரிவு | | |
| | அ) அறப்புறங்காவல் | அனைவருக்கும் உரியர் | காலம் இன்று |
| | ஆ) நாடுகாவல் | அரசரும் இறைப்பொருள் பெயர் பெற்றாரும் | காலம் இன்று |
| 3. | தூதிற்பிரிவு | அந்தணர், அரசர், இறைப்பொருள் பெயர் பெற்றாரும் | ஓர் ஆண்டு. |
| 4. | துணைவயிற் பிரிவு | அரசர், வணிகர், வேளாளர் | ஓர் ஆண்டு. |
| 5. | பொருள்வயிற் பிரிவு | அனைவருக்கும் உரியர். | ஓர் ஆண்டு. |
| 6. | பரத்தையிற் பிரிவு<br>அ) அயன்மனைப் பிரிவு<br>ஆ) அயற்சேரிப் பிரிவு<br>இ) புறத்தைப் போக்கு | அனைவருக்கும் உரியர் | காலம் இல்லை. |

II பிரியும் நிலை:

| | | | |
|---|---|---|---|
| 1. | காலிற் சேறல் | அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்க்கு உரியது. | காலம் இல்லை |
| 2. | கலத்திற் சேறல் (கடல் கடந்து செல்லுதல்) | அரசர், வணிகர், வேளாளர்க்கு உரியது. | காலம் இல்லை |
| 3. | ஊர்தியிற் சேறல். | அனைவருக்கும் உரியது. | காலம் இல்லை. |



(P.T.O)

1.10. உடன் நிற்கும் வாயில்கள்: (15)

தலைவியின் ஊடலைத் தீர்க்கும் அந்தத் வாயில்கள் எனப்படுவர்.

1. பாணன் 2. பாடினி 3. கூத்தர் 4. ஏவலர் 5. கண்டோர் 6. சத்திரிப் பாங்கர் 7. பார்ப்பனப் பாங்கன் 8. தேர்ப்பாகன் 9. தோழி 10. செவிலி 11. அறிவர் 12. காமக்கிழத்தி 13. அன்புப் புதல்வன் 14. விருந்து 15. ஆற்றாமை

1.11. செலவழுங்கல்: இலக்கணம்

தலைமகளைப் பிரிந்துச் செல்லக் கருதிய தலைவன் அச் செலவினைக் கைவிடுதல் செலவழுங்கல் எனப்படும்.

செலவு – பயணம்; அழுங்கல் – தவிர்தல், கைவிடுதல்

1.11.1 செலவழுங்கலுக்கு உரிய இடம்: (2)

1. இல்லத்தில் செலவழுங்கல்
2. போகின்ற வழியில் செலவழுங்கல்.

1.11.2. செலவழுங்கலுக்கான காரணம்:

1. இல்லத்தில் தலைவியையும் தன் நெஞ்சையும் தேற்றுதல்
2. இடைச்சுரத்தில் தன் நெஞ்சைத் தேற்றுதல்

1.12. துறவறம்: இலக்கணம்

தலைவனும் தலைவியும் துறவறம் மேற்கொள்ளுதல் துறவறம் எனப்படும். இல்லற வாழ்வின் பயனாகிய மக்களைப் பெற்று அவர்களுடன் கூடிமகிழ்ந்து இறுதியில் தலைமகனும் தலைமகளும் தம் மனை விட்டு நீங்கிக் காட்டின்கண் சென்று எல்லையில்லாத சுற்றத்தோடு துறவறத்தினையும் காப்பர்.

---

அலகு I - அகத்திணையியல் - இலக்கணம் தாள் - V

[மாதிரி வினாத்தாள்]

## பகுதி - அ (10x2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

1. நால்வகை நிலப்-பெயர்க்காரணம் தருக.
2. அகப்பொருளின் வகைகளைக் கூறுக.
3. கருப்பொருள் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? அவையாவை?
4. கைக்கிளை - இலக்கணம் தருக.
5. பத்து அவத்தைகளைக் கூறுக.
6. இரு - இலக்கணக்கூறு வகைகள் விளக்குக.
7. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
8. கற்பிற்குரிய பிரிவுகள் எத்தனை? அவை யாவை?
9. உடன் நிற்கும் உரியார்கள் எத்தனை?
10. செவ்வழுவல்கள் என்றால் என்ன?

## பகுதி - ஆ (5x5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடையளி:

11. அ) சிறப்புப் பாயிரத்தின் அமைப்புகள் பொருந்தும் முறையை எழுது: (அல்லது)
ஆ) அகப்பொருள் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.
12. அ) ஐந்திணைக்குரிய முதற்பொருளை விளக்கி எழுது. (அல்லது)
ஆ) திணைகளுக்குரிய பொழுதுகளை விளக்குக.
13. அ) களவுப் புணர்ச்சியின் வகைகள் கூறி விளக்குக. (அல்லது)
ஆ) மெய்யுறு புணர்ச்சிக்குரிய காலம் யாவை? விளக்குக.
14. அ) களவுப் பிரிவு எத்தனை? அவை யாவை? விளக்குக. (அல்லது)
ஆ) அறத்தொடு நிற்றலுக்கான காரணம் பற்றி விளக்குக.
15. அ) தோழி அறத்தொடு நிற்கும் இடம் குறித்து எழுது. (அல்லது)
ஆ) கற்பில் பிரிவும் நிலை குறித்து எழுது.

## பகுதி - இ (3x10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடையளி:

16. ஐந்திணைக்கும் உரிய பொருள்களை விளக்கி எழுது:
17. குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருளை விளக்கியுரைக்க:
18. வரைவு - இலக்கணம் கூறி வரைவு நீடல் காலம் பற்றி விரிவான விடையளி.
19. அறத்தொடு நிற்கும் முறையை விளக்குக.
20. கற்பிற்குரிய பிரிவுகளை விளக்கி எழுது.

=

# அலகு - 2

## களவியல் - பாங்கியிற் கூட்டம் முடிய

## அலகு - 2 - களவியல் [பாங்கியிற் கூட்டம் வழி]

### 2.0. முன்னுரை

நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் என்னும் நம்பி அகப்பொருள் நூலின் இரண்டாம் இயலாக களவியல் அமைந்துள்ளது. இவ்வியலில் 54 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன. எனினும், பாங்கியிற் கூட்டம் வழி அமைந்த பகுதியை இரண்டாம் அலகாகக் கொண்டு அதற்குரிய விளக்கங்களைக் காண்போம்.

### 2.1 களவு : இலக்கணம்

தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் மேற்கொள்கின்ற அன்பு வாழ்வை விளக்குவது களவு எனப்படும். இவ்வொழுக்கத்திற்குக் காரணமாக அமைவன.

அ. முற்பிறவியில் செய்த நல்வினை

ஆ. இத்தன் பயனால் தலைவன் தலைவியை இயற்கைப்புணர்ச்சியால் அடைதல்.

இ. அப்புணர்ச்சியால் காதல் வாழ்க்கை மலர்தல்.

இத்தகைய காதல் வாழ்க்கை பிறருக்குத் தெரியாமல் மறைக்கப்படுவதால் களவு எனப்பெயர் பெற்றது.

### 2.1.1. களவின் இயல்பு :

காதல் வாழ்க்கையாகிய களவு வாழ்க்கை அன்பின் ஐந்திணையுள், இக்களவு வாழ்க்கை நான்கு வேதத்துள் கூறப்படும் எண்வகை மணங்களுள் யாழோர் கூட்டமாகிய காந்தர்வ மணத்தை ஒத்தது.

வேதங்கள் 4. அவை, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம். இவற்றுள் பிரமம் முதலாகக் கூறப்பெறுவன எண்வகை மணங்களாகும்.

### 2.2. எண்வகை மணங்கள் :

அ. பிரமம் - பிரமச்சரிய விரதம் காத்த தக்கான் ஒருவனுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீயின் முன்னர்க் கொடுப்பது.

ஆ. பிரசாபத்தியம் - தலைமகனின் பெற்றோர் பெண் வேண்ட தலைமகளின் பெற்றோர் மறுக்காமல் பெண்ணை அலங்கரித்துத் தீயின் முன்னர்க் கொடுப்பது.

இ. ஆரிடம் - தலைமகனிடமிருந்து இரண்டு ஆவையும் (பசு), ஆனேற்றையும் (எருது) வாங்கிக்கொண்டு கன்னியை அலங்கரித்துத் தீயின்முன்னர்க் கொடுப்பது.

4. தெய்வம் — வேள்வி ஆசிரியனுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீயின் முன்னர்க் கொடுப்பது.

5. காந்தர்வம் — கொடுப்பாரும் கேட்பாரும் இன்றி, தலைமகனும் தலைமகளும் தனியிடத்துக் கண்டு கூடுவது.

6. அசுரம் — தலைமகளுக்கு உரியவரான் கொடுப்பதோடு, அவளது சுற்றத்தாருக்கும் வேண்டுவன கொடுத்துப் பெண் கொள்வது.

7. இராக்கதம் — தலைமகள் மற்றும் அவள்தம் பெற்றோர் உடன்பாடின்றி வலிதிற் கொள்வது.

8. பைசாசம் — உறங்கும் பெண்ணிடமும் கள் உண்ட பெண்ணிடமும் வலிதிற் சேர்வது.

இவற்றுள் இறுதி மூன்றும் கைக்கிளை எனவும், முதல் நான்கும் பெருந்திணை எனவும், இடையில் உள்ள காந்தர்வம் அன்பின் ஐந்திணைக்கு ஒப்பானது எனவும் பாகுபடுத்தப்படுகின்றன.

## 2.3 கைக்கிளையின் பாகுபாடு : (4)

ஒருதலைக் காமமாகிய கைக்கிளை, அ. காட்சி ஆ. ஐயம் இ. துணிவு ஈ. குறிப்பறிதல் என நான்கு வகைப்படும்.

அ) காட்சி — நல்வினையின் காரணமாகத் தலைவனும் தலைவியும் தனி இடத்தில் காண்பர். இதுவே காட்சி எனப்படும். இத்தலைவனும் தலைவியும் குலம், செல்வம், அறிவு ஆகியவற்றால் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்வர்.

இத்தகைய தலைவன், தலைவிக்குரிய ஒப்புமைகள் 10. அவை,
1. பிறப்பு 2. குடிமை 3. ஆண்மை (ஆளும் தன்மை) 4. ஆண்டு (வயது) 5. உருவு (தோற்றப் பொலிவு) 6. அன்பு 7. நிறை (மன அடக்கம்) 8. அருள் 9. உணர்வு (நுண்ணறிவு) 10. திரு (செல்வம்).

ஆ) ஐயம் — பொழிலின்கண் தலைவியைக் கண்ட தலைவனுக்கு அவளின் தோற்றமும், அவள் நிற்கும் இடமும் மயக்கத்தைத் தருகின்ற இவள் மானிடப் பெண்ணோ? தெய்வமகளோ? என்ற ஐயம் தோன்றுகிறது. இதுவே ஐயம் எனப்படும்.

இ) துணிவு — தன்னால் காணப்பட்ட பெண் மானிடப் பெண்தான் எனத் தலைவன் பல அடையாளங்களால் அறிந்தே துணிதலாகும். தலைவனின் ஐயத்தை நீக்குவன வருமாறு;

1. தலைவியின் தோற்றமும் மாற்றமும் ஐயமாக எழுதிய கொடி
2. உண்மையான அணிகலன்களை அணிந்திருத்தல்
3. சூடிய வாடிய மலர்
4. பூவைச் சுற்றும் வண்டு 5. அங்கும் இங்கும் நடக்கும் கால்கள்
6. அசையும் கண்கள் 7. ஆண்மகனைக் கண்டவுடன் ஏற்படும் அச்சம்.
8. பிறவும் [கால் நிலம் தோய்தல், வியர்த்தல் போன்றவை]

ஈ) குறிப்பறிதல்:

தலைவியின் வேட்கையைத் தலைவன் குறிப்பால் உணர்தலே குறிப்பறிதல் எனப்படும்.

2.4. களவிற்குரிய கிளவிகள்:

களவிற்குரிய செய்திகளைத் தொகுத்துக் கூறுதலே களவிற்குரிய கிளவிகள் எனப்படும். இவை பதினேழாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வொன்றும் பல கூற்றுக்களை உடையன.

களவிற்குரிய கிளவித்தொகை (17)

1. இயற்கைப்புணர்ச்சி 2. வன்புறை 3. தெளிவு 4. பிரிவுழி மகிழ்ச்சி 5. பிரிவுழிக் கலங்கல் 6. இடந்தலைப்பாடு 7. பாங்கற்கூட்டம் 8. பாங்கி மதியுடன்பாடு 9. பாங்கியிற் கூட்டம் 10. பாங்கமை பகற்குறி 11. பகற்குறி இடையீடு 12. இரவுக்குறி 13. இரவுக்குறி இடையீடு 14. வரைவு வேட்கை 15. வரைவு கடாதல் 16. ஒருவழித் தணத்தல் 17. வரைவு இடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்.

ஆகிய பதினேழும் களவிற்கு உரிய கிளவித் தொகையாகும்.

2.4.1 இயற்கைப் புணர்ச்சியின் தன்மை:

தெய்வத்தால் தலைவன் தலைவியைக் கண்டு கூடுவது இயற்கைப் புணர்ச்சி ஆகும்.

தெய்வப் புணர்ச்சியின் பரி: (3)

தெய்வப் புணர்ச்சி மூவகையாகப் போற்றப்படுகிறது. இவ்வகைப் புணர்ச்சி
1. தலைவன், தலைவியின் புணர்ச்சியால் மகிழ்தல்
2. தலைவியின் அழகைத் தலைவன் பாராட்டுதல்
3. புணர்ச்சியால் கலைந்த தலைவியின் அணிகலன்களைத் தலைவன் ஒழுங்குபடுத்துதல்

என்று சொல்லப்பட்ட மூன்று தன்மைகளை உடையதாகும்.

தலைவனால் எய்தும் இயற்கைப் புணர்ச்சி வகைகள் : [4].

தலைமக்களாலும் இயற்கைப் புணர்ச்சி நிகழ்வதுண்டு. அப்புணர்ச்சி,

1. தலைவன் தன் வேட்கையைத் தலைவியிடம் தெரிவித்தல் — வேட்கை உணர்த்தல்
2. தலைவி அதனை மறுத்தல் — மறுத்தல்
3. தலைவி பின்னர் ஏற்றுக் கொள்ளுதல் — உடன்படல்
4. தலைவன் தலைவியுடன் பின்னர் கூட்டம் நிகழ்த்தல் — கூட்டம்

என்று சொல்லப்பட்ட நான்கு நிலைகளை உடையது.

தலைவனால் நிகழும் இயற்கைப்புணர்ச்சியின் துறை : (16)

1. வேட்கை உணர்த்துதற்கான துறைகள் : [8] 2. மறுத்தல் : [4] 3. உடன்படல் : [4] 4. கூட்டம் : [3]. அவை வருமாறு;

| வேட்கை உணர்த்தல் | மறுத்தல் | உடன்படல் | கூட்டம் |
|---|---|---|---|
| 1. இரந்து பின்னிற்றற்கு எண்ணல் | வழிபாடு மறுத்தல் | மறுத்து எதிர்கோடல் | புணர்ச்சியின் மகிழ்தல் |
| 2. இரந்து பின்னிலை நிற்றல் | | வறிது நகை தோற்றல் | புகழ்தல் |
| 3. முன்னிலை ஆக்கல் | | முறுவல் குறிப்பு உணர்தல் | |
| 4. மெய்தொட்டுப் பயிறல் | | | பாராட்டல் |
| 5. பொய் பாராட்டல் | | முயங்குதல் உறுத்தல் | |
| 6. இடம் பெற்றுத் தழால் | | | |
| 7. இடையூறு கிளத்தல் | | | |
| 8. நீடு நினைந்து இரங்கல் | | | |

2.4.2 <u>வன்புறை</u> : <u>இலக்கணம்</u>.

இயற்கைப் புணர்ச்சியின் கூடி மகிழ்ந்த தலைவி தன்னைவிட்டுப் பிரியும் தலைவன் மீண்டு வருவானோ என ஐயப்படுவாள். அவளின் ஐயத்தைப் போக்குமாறு தலைவன் மீண்டும் வருவேன் என்று வலியுறுத்திக் கூறுதல் வன்புறை எனப்படும்.

[வன்புறை - வற்புறுத்திக் கூறல்].

I வன்புறையின் வகைகள் : [2] மற்றும் துறை : [6]

வன்புறையானது 2 வகைகளை உடையதாகும். அவை;

1. ஐயம் தீர்த்தல் 2. பிரிவு அறிவுறுத்தல். இதன் துறை 6 ஆகும். அவை வருமாறு;

வன்புறை வகை மற்றும் பிரி.

- (1) ஐயம் நீக்கல்
  - (1) அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல்
  - (2) பெருநயப்பு உரைத்தல்
  - (3) தெய்வத் திறம் பேசல்
- (2) பிரிவு அறிவுறுத்தல்
  - (4) பிரிவேன் என்றல்
  - (5) பார்த்து வருவேன் என்றல்
  - (6) இடம் அணித்து என்றல்

2.4.3. தெளிவு : இலக்கணம்:

தலைவனுடன் கூடி இன்புற்ற தலைவி தலைவனின் சொல்லை மெய்யென ஏற்றுப் பிரிவைப் பொறுத்துக் கொள்ளும் நிலையே தெளிவாகும்.

2.4.4. பிரிவுழி மகிழ்ச்சி : இலக்கணம்.

தலைவன் இனிமேல் வருவேன் என்று கூறித் தெளிவுபடுத்த அதனை உண்மையென்று நம்பி தெளிவு பெற்ற தலைவி தலைவனை வருந்தப் பார்த்துச் செல்வாள். இவ்வாறு பார்த்துச் செல்லும் தலைவியைக் கண்டு தலைவன் மகிழ்தல் பிரிவுழி மகிழ்ச்சி எனப்படும்.

இதன் பிரி 2. அவை;

1. தலைமகன் செல்வதனைக் கண்டு தலைமகள் தன் நெஞ்சிற்குக் கூறுதல்
2. தன்னைத் தேடி வந்த பாகனிடம் கூறுதல்.

2.4.5. பிரிவுழிக் கலங்கல் : இலக்கணம்.

தலைவி பார்த்துச் சென்றபின் தலைவன் வருந்தும் நிலை பிரிவுழிக் கலங்கல் எனப்படும். இதில் தலைவன் மகிழ்ந்ததையும் பின்னர் இவளை எவ்வாறு அடைந்தேன்? இது எவ்வாறு நிகழ்ந்தது? என்றெல்லாம் நினைத்து மகிழ்ச்சியில் கலங்கல் ஆகும்.

இவ்வகை 2 வகைப்படும். அவை மட்டுமின்றி பிரி 5 வகைப்படும். அவை வருமாறு;

பிரிவுழிக் கலங்கல் [2]

- மருண்டு உரைத்தல் [1]
  - தலைவியுடன் கூடியது மாயமோ எனத் தலைவன் மயங்கிக் கூறுதல்.
- தெருண்டு உரைத்தல் [4]
  1. உயர்ந்தோரை உயர்த்தோதல்
  2. தலைவியின் அழகைப் பாராட்டல்
  3. தலைவியை ...

~~வன்புறையின் விரி : 6~~

~~5. ...~~

4. தலைவியை நினைத்து உறங்காமல் வருந்திக் கூறுதல்

## 2.4.6 இடந்தலைப்பாடு : இலக்கணம்.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைப் புணர்ந்த தலைவன் அடுத்த நாளும் அவ்விடத்தில் தலைவியைக் கூடி மகிழ்தல் இடந்தலைப்பாடு எனப்படும்.

இதன் வகை 3, விரி 5 ஆகும். அவை வருமாறு;

இடந்தலைப்பாடு [3]

- தெய்வம் தெளிதல் [1]
  1. தந்த தெய்வம் தருமெனச் சேறல்
- கூடல் [3]
  2. காண்டல்
  3. மொழிதல்
  4. புகழ்தல்
- விடுத்தல் [1]
  5. ஆயத்து உய்த்தல்

## 2.4.7 பாங்கற் கூட்டம் : இலக்கணம்

இயற்கைப் புணர்ச்சியால் கூடிய தலைவன் பாங்கனின் உதவியால் மூன்றாம் நாளும் தலைவியுடன் கூடுதல் பாங்கற் கூட்டம் எனப்படும்.

இதன் வகைகள் 7, விரி 24 ஆகும். அவை;

பாங்கற் கூட்டம்

- சார்தல், கேட்டல், சாற்றல்
  - ~~1. சார்தல்~~
  1. தலைவன் பாங்கனைச் சார்தல்
  2. பாங்கன் தலைவனை உற்றது வினாதல்
  3. தலைவன் உற்றது உரைத்தல்
- எதிர்மறை [4]
  1. பாங்கன் கழறல்
  2. தலைவன் எதிர் மறுத்தல்
  3. பாங்கன் புலம்பல்
  4. தலைவன் தான் கொண்ட வேட்கையைக் கூறுதல்
- நேர்தல் [11]
  1. பாங்கன் தன் மனத்து அழுங்கல்
  2. தலைவனொடு அழுங்கல்
  3. தலைவி எங்கே என்றல் (பாங்கன்)
  4. தலைவி இடமும் இவ்வியல்பு என்று தலைவன் கூறல்
  5. பாங்கன் தலைவியைத் தேறுதல்
  6. பாங்கன் இறைவழிச் சேறல்
- கூடல்
- பாங்கிற் கூட்டல்

**நோக்கல் ↓**

7. பாங்கன் தலைவனைக் காணல்
8. தலைவன் தோற்றம் கண்டு தலைவன் இயற்கை பாங்கன் வருந்தல்
9. தலைவனை வாழ்த்தல்
10. தலைவனை வாழ்த்தல்
11. இருவரும் ... தலைவனை ... தலைவன் கூடுதல்.

**கூடல் ↓ [4]**

1. தலைவன் இருப்பிடம் செல்லுதல்
2. தலைவன் தலைவியைக் காணுதல்
3. புணர்ச்சியால் மகிழ்தல்
4. தலைவியைத் தலைவன் புகழ்ந்து பேசுதல்

**பாங்கிற் கூட்டல் ↓ [2]**

1. தலைவியைப் பாங்கனிடம் வருக எனக் கூறுதல்
2. தலைவனைத் தலைவன் தோழியர் கூட்டிற்குச் செல்லுதல்.

## 2.4.8 பாங்கி மதி உடன்பாடு : இலக்கணம்

தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையில் கூடி மகிழ்ந்ததைத் தோழி தன் மதியால் அறிதல். பின்னர் அவர்களின் காதலுக்கு உடன்படுதல் ஆகியவையே பாங்கி மதி உடன்பாடு எனப்படும்.

2.5.1. பாங்கி மதி உடன்பாட்டின் வகைகள் : [3]

பாங்கி மதி உடன்பாடு 3 வகைகளைக் கொண்டது. அவை,

அ) முன்னுற உணர்தல் ஆ) குறையுற உணர்தல் இ) இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்.

2.5.2 அ) முன்னுற உணர்தல் : இலக்கணம்.

தலைவியின் தோற்றத்தில் வேறுபாடுகளைக் கண்ட தோழி சில குறிப்புகளால் அத்தலைவியின் புணர்ச்சி உண்மையை அறிவது முன்னுற உணர்தல் எனப்படும்.

[மெய்ம்மை – குறிப்பு]

முன்னுற உணர்தலின் வகைகள் : [3]

1. தலைவியின் தோற்றத்தில் காணப்படும் வேறுபாடுகளைக் கண்ட தோழி குறிப்பினைக் கண்டு ஐயமுறுதல்
2. ஆராய்ந்து பின்னர் ஐயம் தீர்தல்
3. மெய்யாக, பொய்யாகப் பேசி அதன்வழி தலைவியின் களவு வாழ்வை ஆராய்தல்.

தலைவியின் தோற்றத்தில் காணப்படும் குறிப்புகள்

1. தலைவியின் உடலில் தோன்றும் புதுமணம்
2. தோற்றத்தில் புதுப்பொலிவு
3. தெய்வம் தொழாமை

4. குறைத்து உரை உரைத்தல்
5. தன் செயல்களை மறைத்தல்
6. தோழியின் கூட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்
7. புரை இடத்தில் கொள்வதும்.

2.5.3 இ) குறையுற உணர்தல் : இலக்கணம்.

தலைவன் கையுறை (தழையும் கண்ணியும்) ஏந்திக்கொண்டு தோழியிடத்துத் தன் மனக்குறையைத் தீர்க்க வேண்டுவதைக் கொண்டு தலைவியின் புணர்ச்சி உண்மையைத் தோழி அறிதல் குறையுற உணர்தல் எனப்படும்.

குறையுற உணர்தலின் வகைகள்: [2]

1. கேட்டல் – வினாவுதல்
2. தெளிதல் – வினாவித் தெளிதல்.

2.5.4 ஈ) இருவரும் உள்வழி அவன் வர உணர்தல் : இலக்கணம்.

தலைவியும் தோழியும் உடனிருக்கும் போது தலைவன் கையுறை ஏந்தி வருவான். இவ்வாறாகத் தோழியானவள் தலைவியின் காதற்புணர்ச்சியை உணர்தல் இருவரும் உள்வழி அவன் வர உணர்தல் எனப்படும்.

இருவரும் உள்வழி அவன் வர உணர்தலின் வகைகள் : [3]

1. எதிர்மொழி கொடுத்தல்
2. இறைவனை நகுதல்
3. மனக்கருத்து உணர்தல்

பாங்கி மதியுடன்பாடு 3 வகைகளின் 8 பிரிவுகளும் அதன் விரிவாகவும் அமையும்.

2.4.9 பாங்கியிற் கூட்டம் : இலக்கணம்.

பாங்கியின் உதவியால் தலைவன் தலைவியைக் கூடும் கூட்டம் பாங்கியிற் கூட்டம் எனப்படும்.

பாங்கியிற் கூட்டத்தின் வகைகள் : [12]

பாங்கியிற் கூட்டம் 12 வகைகளைக் கொண்டது. அவை;

1. இரந்து பின்னிற்றல் : தலைவன் தோழியிடம் தலைவியுடனான் காதலை நிறைவேற்றச் சொல்லித் தோழியைப் புகழ்தல்.

2. சேட்படை : தலைவனின் இரந்துபின்னிலை நின்றவனைத் தலைவியிடம் தோழி எடுத்துக் கூறித் தலைவனை அவ்விடத்திலிருந்து நீக்குதல்.

3. மடல் கூற்று : தலைவன் தலைவிக்காக மடல் ஏறுவேன் என்று தோழியிடம் கூறுதல்

4. மடல் விலக்கு : தலைவனை மடல் ஏறுதல் இயலாது எனக் கூறித் தோழி மடல் ஏறுதலை தடுத்தல்

5. குறைநேர்தல் : (உடன்படுதல்) தலைவனின் நிலைமையை எண்ணித் தோழி தலைவனின் காதலுக்குத் துணை புரிதல்.

6. மடல் கூற்றொழிதல் : தலைவன் மகிழ்ந்து மடல் ஏறுதலைக் கைவிடுதல்.

7. குறைநயப்பித்தல் : தலைவனின் குறையைத் தலைவியிடம் கூறி, தலைவியைத் தோழி உடன்படச் செய்தல்.

8. நயத்தல் : தலைவனின் குறையை உணர்ந்து தலைவி விரும்பும் நிலை

9. கூட்டல் : தலைவியைத் தோழி குறியிடத்து அனுப்புதல்.

10. கூடல் : தலைவனோடு தலைவி கூடுதல்.

11. ஆயங்கூட்டல் : தலைவனோடு கூடி மீண்டு வந்த தலைவியைத் தோழி தன் கூட்டத்தோடு சேர்த்து வைத்தல் (ஆயத்தோடு).

12. வேட்டல் : தலைவன் விருந்தினை பேணுதல்.

இவ்வாறு வகையும் பாங்கற்கூட்டம் என்பது அறியப்படுகிறது.

# அலகு 2 – களவியல் [பாங்கற்கூட்டப் பகுதி]
## [மாதிரி வினாக்கள்]

### பகுதி – அ (10×2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

1. களவு – இலக்கணம் தருக.
2. எண்வகை மணங்களில் அன்பின் ஐந்திணைக்கு ஒப்பது எது?
3. குறிப்பறிதல் – விளக்குக.
4. வன்புறை – விளக்குக.
5. இடந்தலைப்பாடு – விளக்குக.
6. பாங்கி மதி உடன்பாடு – விளக்குக.
7. முன்னம் – பொருள் கூறு.
8. பாங்கியிற் கூட்டம் எத்தனை வகைகளை உடையது?
9. சேட்படை – விளக்குக.
10. இரந்துபின்னிற்றல் – விளக்குக.

### பகுதி – ஆ (5×5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு இருபக்க அளவில் விடைதருக.

11. அ) எண்வகை மணங்களை விளக்குக. (அல்லது)
ஆ) கைக்கிளையின் பாகுபாட்டினை விவரி.

12. அ) இயற்கைப் புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக. (அல்லது)
ஆ) தலைவியால் நிகழும் இயற்கைப் புணர்ச்சியை விளக்கி அதன் வகைகளை எழுது.

13. அ) புணர்ச்சி நிலைகள் என்றால் என்ன? – அதன் வகைகளை விளக்குக. (அல்லது)
ஆ) பாங்கற் கூட்டம் – இலக்கணம் கூறி அதன் வகைகளை விளக்குக.

14. அ) பாங்கி மதி உடன்பாட்டின் வகைகளை விளக்குக. (அல்லது)
ஆ) பாங்கியிற் கூட்டத்தின் வகைகளை விளக்குக.

15. அ) களவொழுக்கம் பற்றி சுருக்கி வரைக. (அல்லது)
ஆ) இடந்தலைப்பாட்டின் வகைகளை விளக்குக.

### பகுதி – இ (3×10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு நான்கு பக்க அளவில் விடையளி:

16. தலைவனால் நிகழும் இயற்கைப் புணர்ச்சியின் விளக்கங் கூறி விளக்குக.
17. வன்புறையின் வகைகளையும் அதன் விளக்கத்தையும் கூறி விளக்குக.
18. பாங்கற்கூட்டத்தில் தோற்றம் என்ற வகையின் விளக்கத்தை விளக்குக.
19. இடந்தலைப்பாட்டின் வகைகளுக்குரிய விளக்கத்தை விளக்குக.
20. களவுப் புணர்ச்சிக்குரிய கிளவித் தொகைகள் எத்தனை? அவையாவை? விளக்குக.

# அலகு-3

# களவியல்

## பகற்குறி முதல் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் முடிய

## அலகு 3 - களவியல் (பகற்குறி முதல் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் முடிய)

களவிற்குரிய கிளவித்தொகை 17 ஆகும். இவற்றுள் அலகு 2-ல் 1. இயற்கைப் புணர்ச்சி முதலாக 9. பாங்கியிற் கூட்டம் ஈறாக விளக்கப்பட்டது. இவ்வலகில் 10. பகற்குறி முதல் 17. வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிவு ஈறாக உள்ள வகைகளின் விளக்கங்களைக் காணலாம்.

### 10. பகற்குறி.

3.0 பகற்குறி விளக்கம்:

பகற்பொழுதில் தலைவன் தலைவியைக் கூடுவதற்காகக் குறிக்கப்படும் இடம் பகற்குறி எனப்படும்.

3.1 பகற்குறியின் வகைகள்: [4]

1. கூட்டல் 2. கூடல் 3. பாங்கிற் கூட்டல் 4. வேட்டல் எனப் பகற்குறி 4 வகைப்படும்.

பகற்குறியின் விரி: [12]

1. குறியிடம் கூறல் 2. குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல். 3. குறியிடத்து உய்த்து நீங்கல் 4. இறையோன் இடத்து எதிர்ப்படுதல் 5. புணர்தல் 6. புகழ்தல் 7. அருத்தல் 8. பாங்கி தலைவியிடம் கையுறை காட்டல். 9. தலைவியைப் பாங்கியர் கூட்டத்துள் சேர்த்தல் 10. ஆயமுடை சாற்றல் 11. விருந்தினை உணர்த்தி பகற்குறி விலக்கல் 12. தலைவன் விருந்தினனை விரும்பல்

3.1.1 ஒருசார் பகற்குறியின் இலக்கணம்:

பகற்குறிக்கண் தலைவியைப் புணர்ந்து மகிழ்ந்த தலைவன் மறுநாளும் பகலில் அவ்விடம் வந்து தலைவியைக் கூட விரும்பினான். தோழி தலைவி வீட்டாரின் காவல் தன்மையைக்காட்டி தலைவனை அவ்விடத்திலிருந்து நீங்கச் செய்வாள். இவ்வாறு குறிக்கண் வந்த தலைவன் தலைவியைக் காணாது செல்வதால் இது ஒருசார் பகற்குறி ஆயிற்று.

3.1.2 ஒருசார் பகற்குறியின் வகைகள்: [3]

1. இரங்கல் 2. வன்புறை 3. இற்செறிப்பு உணர்த்தல்.

3.1.3. 11. பகற்குறி இடையீடு

பகற்குறி இடையீட்டின் இலக்கணம் :

பகற்குறிக்கண் தலைவியைக் காண வரும் தலைவனுக்கு அச்செயல் தடைப்பட்டுப் போதல் பகற்குறி இடையீடு எனப்படும்.

பகற்குறி இடையீட்டின் வகைகள் : [3]

1. விலக்கல் 2. சேறல் 3. கலக்கம் என மூன்று வகைகளை உடையது

பகற்குறி இடையீட்டின் விரி : [7]

1. விலக்கல் — 1. இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல் (இறைவன் - தலைவன்)
   2. இறைவியைக் குறிவரல் விலக்கல் [இறைவி - தலைவி]

2. சேறல் — இறைமகள் தலைவனோடு கூடி மகிழ்ந்த இடங்களைக் கண்டு அழுதல் கண்டு அவளை அழைத்துக்கொண்டு தோழி தம் ஊருக்குச் செல்லுதல்.

3. கலக்கம் — 3. தலைமகள் தலைவனொடு கூடி மகிழ்ந்த இடங்களைக் கண்டு வருந்துதல்.
   5. தலைவன் குறியிடத்தில் நீண்ட நேரம் நின்று தலைவியை நினைத்து வருந்துதல்.
   6. தலைவி இல்லாத தினைப்புனத்தைப் பார்த்து வருந்திக் கூறுதல்.
   7. தலைவியானவள் ஊரை நோக்கி மதிமயங்கிக் கூறல்.

12. இரவுக்குறி

3.2. இரவுக்குறியின் இலக்கணம் :

இரவுப் பொழுதில் தலைவன் தலைவியைக் காண்பதற்காகக் குறிக்கப்படும் இடம் இரவுக்குறி ஆகும்.

3.2.1. இரவுக்குறியின் வகைகள் : [9]

1. வேண்டல் 2. மறுத்தல் 3. உடன்படல் 4. கூட்டல் 5. கூடல் 6. பாராட்டல் 7. பாங்கியற் கூட்டல் 8. உயங்கல் 9. நீங்கல்

ஆகிய ஒன்பது வகைகளைக் கொண்டது.

இரவுக்குறியின் விரி 27 ஆகும்.

## 13. இரவுக்குறி இடையீடு

இரவுக்குறியின் இலக்கணம் :

இரவுக்குறிக்கண் தலைவியைக் காண வரும் தலைவனுக்கு அச்செயல் தடைப்பட்டுப் போதல் இரவுக்குறி இடையீடு எனக் கூறப்படும்.

3.2.2. இரவுக்குறி இடையீட்டின் வகைகள் : [2]

அ. அல்லகுறி ஆ. வருந்தொழிற்கு அருமை என இரவுக்குறியிடையீடு இரண்டு வகைப்படும்.

அ) அல்லகுறி : விளக்கம்

தலைவியைக் காணவரும் தலைவன் குறியிடத்திற்கு வந்தவுடன் பறவைகளை ஒலியெழச் செய்தல், நீரில் கல்லெறிதல் ஆகிய இவற்றின் ஓசையாலும் தன் வரவைத் தலைவிக்கு உணர்த்துவான். இச்செயல்கள் தலைவன் நிகழ்த்தாமல் தாமாக நிகழ்வதும் உண்டு. அந்நேரத்தில் தலைவன் வந்துவிட்டதாக எண்ணித் தலைவி குறியிடத்திற்கு வந்து தலைவனைக் காணாமல் திரும்பிச் செல்வாள். இவ்வாறு நிகழ்வதே அல்லகுறி ஆகும்.

அல்லகுறி 11 - வகைகளை உடையதாகும்.

ஆ) வருந்தொழிற்கு அருமை : விளக்கம்.

தலைவன் இரவுக்குறிக்கண் வருவதற்கு இடையூறாக சில நிகழ்ச்சிகள் நிகழும். இதுவே வருந்தொழிற்கு அருமை எனப்படும்.

இது 7 வகைகளை உடையதாகும். அவை;

1. தாய் துஞ்சாமை 2. நாய் துஞ்சாமை 3. ஊர் துஞ்சாமை 4. காவலர் ஊர்சுற்றி வருதல் 5. கூகை குழறுதல் 6. நிலவு வெளிப்படுதல் 7. கோழி கூவுதல் முதலியன ஆகும்.

3.2.3. 14. வரைதல் வேட்கை.

அல்லகுறியாலும், வருந்தொழிற்கு அருமை ஆகிய காரணத்தாலும் தலைவனைக் காண இயலாமல் வருந்தும் தலைவி, தலைவனை மணந்துகொள்ளும் விருப்பத்தைத் தன் தோழியிடம் கூறுதல் வரைதல் வேட்கை எனப்படும்.

வரைதல் வேட்கையின் வகைகள் : [3].

1. அச்சம் 2. உவர்த்தல் 3. ஆற்றாமை ஆகிய மூன்றும் வரைதல் வேட்கையின் வகைகள் ஆகும்.

3.2.4 15. வரைவு கடாதல்

வரைவு கடாதல் : இலக்கணம்

வரைவு - திருமணம் ; கடாதல் - விரைவு படுத்தல்.

[2

களவொழுக்கத்தில் காலம் நீட்டிக்கும் தலைவனை, விரைந்து வந்து தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்று தோழி வற்புறுத்திக் கூறுவது வரைவு கடாதல் ஆகும்.

வரைவு கடாதலின் வகைகள் : [4]

1. பொய்த்தல் 2. மறுத்தல் 3. கழறல் 4. மெய்த்தல் என்ற நான்கும் வரைவு கடாதலின் வகைகளாகும்.

கழறல் – இடித்துரைத்தல்

அம்பல் : விளக்கம்.

தலைவன், தலைவி ஆகிய இருவரின் களவொழுக்கம் பற்றி சிலருக்கு மட்டும் தெரிவது அம்பல் எனப்படும்.

அருகில் உள்ள ~~இ~~ [இலைக்கு] மட்டும் மணம் பரப்புகின்ற அரும்பைப்போல வெளிப்படுவது அம்பல் எனப்படும்.

அலர் : விளக்கம்.

களவொழுக்கம் பலரால் அறியப்படுவது அலர் எனப்படும்.

மலர்ந்த மலரின் மணம் பலராலும் அறியப்படுவது போல தலைவன், தலைவியின் களவொழுக்கம் பலராலும் அறியப்பட்டு பழிக்கப்படுதலே அலர் எனப்படும்.

## 16. ஒருவழித் தணத்தல்

3.2.5 ஒருவழித்தணத்தல் : விளக்கம்.

தலைவன், தலைவியின் களவொழுக்கம்பற்றி எழுந்த அலரால் தலைவன் சிலநாட்கள் தலைவியைக் காண வராமல் பிரிந்து இருப்பான். இப்பிரிவே ஒருவழித் தணத்தல் எனப்படும்.

ஒருவழித்தணத்தலின் வகைகள் : [7]

ஒருவழித்தணத்தல் 7 வகைகளை உடையதாகும். அவை;

1. செலவு அறிவுறுத்தல் 2. செலவு உடன்படாமை 3. செலவு உடன்படுத்தல்
4. செலவு உடன்படல் 5. சென்றுழிக் கலங்கல் 6. தேற்றி ஆற்றுவித்தல்
7. வந்துழி நொந்துரை.

3.2.6. 17. வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்.

விளக்கம் :

தோழி தலைவனைத் திருமணம் செய்துகொள்ள வலியுறுத்துவாள். விரைவு படுத்துவாள். இதன் காரணமாகத் தலைவன் பொருள் தேடச்செல்லும் பிரிவே வரைவு இடைவைத்துப் பொருள் வயின் பிரிதலாகும்.

திருமணத்தை மையமாக வைத்து பொருள் தேடப் பிரிகிறான்.

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலின் வகைகள் : [9].

1. பிரிவு அறிவுறுத்தல் 2. பிரிவு உடன்படாமை 3. பிரிவு உடன்படுத்தல் 4. பிரிவு உடன்படல் 5. பிரிவுழிக் கலங்கல் 6. வன்புறை 7. வன்பொறை 8. வருவழிக் கலங்கல் 9. வந்துழி மகிழ்ச்சி.

[வன்புறை – வற்புறுத்திக் கூறுதல்; வன்பொறை – பொறுத்துக் கொள்ளுதல்]

வினாக்கள் :

1. இருசார் பகற்குறி – விளக்குக.
2. பகற்குறி இடையீடு என்றால் என்ன?
3. அல்லகுறி – விவரி.
4. வரைதல் வேட்கை – விளக்குக.
5. வரைவு கடாதல் – விவரி.
6. ஒருவழித் தணத்தல் – பொருள் கூறுக.
7. வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலின் வகைகளைக் கூறுக.
8. வன்புறை – பொருள் கூறுக.
9. வன்பொறை – பொருள் கூறுக.

# அலகு - 4

# வரைவியல்

# அலகு 4 - வரைவியல்

தலைவியைத் தலைவன் சான்றோர் முன்னிலையில் உரோரிய திருமணம் செய்து கொள்வதே வரைவு எனப்படும். வரைவு தொடர்பான செய்திகளை இவ்வியல் கூறுவதால் வரைவியல் எனப்பட்டது. இவ்வியலில் 29 நூற்பாக்கள் உள்ளன. [வரைவு - திருமணம்]

## 4.0 வரைவின் இலக்கணம் :

வரைதல் கற்பு வாழ்க்கையாகிய இல்லற வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைவதாகும். அத்தகைய வரைவாகிய திருமணம் தலைவன் தலைவியை அவளது பெற்றோர் கொடுப்பவும், கொடாது இருக்கவும் வதுவைச் சடங்கொடு பொருந்த மணம் செய்து கொள்வது ஆகும்.

## 4.1. வரைவு நிகழ்தலுக்கான கிளவித் தொகைகள்: [2]

அ. வரைவு மலிதல் ஆ. அறத்தொடு நிற்றல்.

### 4.1.1 அ. வரைவு மலிதல் : இலக்கணம்.

திருமணத்தை விரைந்து நடத்துவதற்கான முயற்சியின் மகிழ்வைக் கூறுவது வரைவு மலிதல் ஆகும்.

| வரைவு மலிதலின் வகைகள்: [4] | சான்று [7] |
|---|---|
| 1. வரைவு முயல்வு உணர்த்தல்<br>பொருள்: தலைவன் திருமண முயற்சியை உணர்த்துதல். | 1. காதலனாகிய தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு அவளின் பெற்றோர்க்குப் பரிசுப் பொருட்களைக் கொடுத்ததைத் தோழி தலைவிக்குத் தெரிவித்தல்.<br>6. திருமணம் நிகழப்போவதால் தலைமகள் இறைவனைத் தொழுவாள். இதனைத் தோழி தலைவனுக்குக் காட்டல். |
| 2. வரைவு எதிர் உணர்த்தல்<br>பொருள்: திருமணத்தைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக் கொள்வதை உணர்த்தல் | 3. தலைவனின் உறவினர் வரைவு குறித்துப் பேச வருவதை பெற்றோர் ஏற்றுக் கொள்வர் எனத் தோழி தலைவியிடம் கூறுதல். |

| | |
|---|---|
| 3. வரைவு அறிந்து மகிழ்தல்.<br>பொருள்: திருமணம் நிகழும் வேளை நினைந்து தலைவி மகிழ்தல். | 2. நற்றாய் மகிழ்தலைக் கண்டு தலைவி மகிழ்ச்சி கொள்ளுதல்.<br>4. அடங்காத மகிழ்ச்சியைத் தலைவி தன் நெஞ்சிற்குக் கூறுதல்.<br>5. தலைவனைத் தோழி வாழ்த்துதல். |
| 4. பரவல் கண்டு உவத்தல்.<br>பொருள்: திருமணம் காரணமாகத் தலைவி தெய்வம் தொழுவாள். இதனைக் கண்ட தலைவன் மகிழ்தல். | 7. தலைவி இறைவனைத் தொழுதலைக் கண்டு தலைவன் மகிழ்தல். |

4.1.2.ஆ) அறத்தொடு நிற்றல் நிலை:

தலைவி தனது களவொழுக்கத்தை முறைப்படுத்தி வெளிப்படுத்துவதே அறத்தொடு நிற்றலின் நிலையாகும்.

i) அறத்தொடு நிலையின் வகைகள்:

அறத்தொடு நிலை, அ) முன்னிலை மொழி ஆ) முன்னிலைப் புற மொழி என இருவகைப்படும்.

ii) தலைவி அறத்தொடு நிற்றல் கிளவிகள்: [7]

தலைவி அறத்தொடு நிற்றலுக்கான கிளவிகள் 7 ஆகும்.

iii) பாங்கி அறத்தொடு நிற்றல் - கிளவிகள்: [5].

1. தலைமகளின் வேற்றுமைக்கு உரிய காரணம் பற்றி செவிலி கேட்டல்
2. தோழி வெறி விலக்கிய இதற்குக் காரணம் கேட்டல்
3. பாங்கி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.
4. புனல்தரு புணர்ச்சியைக் கூறி அறத்தொடு நிற்றல்.
5. களிற்றால் ஏற்பட்ட புணர்ச்சியைக் கூறி அறத்தொடு நிற்றல்.

* பூத்தரு புணர்ச்சி: விளக்கம்:

தலைவி தன் இளமைப்பருவத்தில் தம் விளையாட்டுப் பாவைக்குப் பூவைச் சூட்டத் தருமாறு தலைவனிடம் வேண்ட, அவனும் மறுக்காமல் கொடுத்து நிகழ்ந்த அச்செயலை நினைந்து தலைவி இன்று மெய்வாடுவாள் என்று தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்பாள்.

பூவைத் தந்ததன் காரணமாக ஏற்பட்ட நட்பை விளக்குவது பூத்தரு புணர்ச்சி எனப்படும்.

* புனல்தரு புணர்ச்சி: விளக்கம்

தலைவி ஒருநாள் ஆற்றில் நீராடியபோது, நீர்ச்சுழியால் இழுத்துச் செல்லப்பட்டாள். அப்போது தலைவி தன்னைக் காப்பாற்றும்படி கூறியபோது தலைவன் அவளைக் காப்பாற்றினான். அந்நிகழ்வை எண்ணித் தலைவி வருந்தும் அமைந்தாள் என்று தோழி செவிலியிடம் கூறி அறத்தொடு நிற்பாள்.

புனலால் ஏற்பட்ட புணர்ச்சி ஆதலின் இது புனல்தரு புணர்ச்சி ஆயிற்று.

*களிறுதரு புணர்ச்சி : விளக்கம்

தலைவி தினைப்புனம் காத்தபோது வேழம் ஒன்று எதிரில் தோன்றியது. இதனால் அஞ்சிய அவர்கள் முன் தோன்றியவன் தன் கையில் இருந்த வேலால் யானையின் நெற்றியில் பாய்ச்சினான். இதனால் தலைவிக்குத் தலைவனோடு புணர்ச்சி ஏற்பட்டது. இதனை எண்ணித் தலைவி வருந்துகின்றாள் என்று தோழி செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்பாள்.

இவ்வாறு களிற்றால் ஏற்பட்ட புணர்ச்சி களிறுதரு புணர்ச்சி எனப்பட்டது.

iv) செவிலி அறத்தொடு நிற்றல்:

செவிலி தலைவியின் களவைத் தோழி வாயிலாக அறிந்து, அதனை நற்றாய்க்கு முன்னிலை மொழியால் அறத்தொடு நிற்பாள்.

4.2. களவு வெளிப்பாடு:

தலைவன், தலைவி ஆகிய இருவரின் களவொழுக்கம் ஊரில் உள்ளார் பலருக்கும் தெரிந்து அலராதல் களவு வெளிப்பாடு எனப்படும்.

களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகைகள் : [3]

அ). உடன்போக்கு ஆ). கற்பொடு புணர்ந்த கவ்வை இ) மீட்சி.

4.2.1. அ) உடன்போக்கு:

களவு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவன், தலைவி இருவரும் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு தமரைப் பிரிந்து செல்வது உடன்போக்கு எனப்படும்.

உடன்போக்கின் வகைகள் : [8]

அவை; 1. போக்கு அறிவுறுத்தல் 2. போக்கு உடன்படாமை
3. போக்கு உடன்படுத்தல் 4. போக்கு உடன்படுதல் 5. போக்கல் 6. விலக்கல்
7. புகழ்தல் 8. தேற்றல்.

உடன்போக்கின் விரி 18 ஆகும்.

4.2.2.ஆ) கற்பொடு புணர்ந்த கவ்வை: இலக்கணம்:

தலைவி, தலைவனின் உடன்போக்கு நிகழ்ச்சி கற்பொடு கூடியவுடனான ஆரவாரம் நிகழும். இவ்வாறு இந்நிகழ்வு பலராலும் அறியப்படுவதால் கற்பொடு புணர்ந்த கவ்வையானது.

வகைகள்: [5]

1. செவிலிபுலம்பல் 2. நற்றாய் புலம்பல் 3. கவர்மனைமருட்சி
4. கண்டோர் இரக்கம் 5. செவிலி பின்தேடிச் சேறல்.

[கவர் - துன்பம்]

செவிலி புலம்பல்:

தலைவி தலைவனோடு சென்றதனை அறிந்த செவிலி வருந்துவதே செவிலி புலம்பல் ஆகும்.

இதன் விரி 3 ஆகும்.

நற்றாய் புலம்பல்:

செவிலி வாயிலாகத் தலைவியின் உடன்போக்கை அறிந்த நற்றாய் புலம்புதல்.

இதன் விரி 4 ஆகும்.

மனை மருட்சி:

தலைவியின் பாவைத் தாய்காமல் நற்றாய் மனையின்கண் இருந்து புலம்புவதே மனை மருட்சி எனப்படும்.

இதனை அனை மருட்சி என்றும் கூறுவர். அன்னை என்பதன் இடைக்குறையே அனை ஆகும்.

இதன் விரி 5 ஆகும்

கண்டோர் இரங்கல்

தலைவியின் உடன்போக்கு நிகழ்ச்சியால் நற்றாயும் செவிலித்தாயும் தோழியின் கூட்டத்தாரும் வருந்துதலைக்கண்டு பாரோர் வருந்துவது கண்டோர் இரங்கல் ஆகும்.

செவிலி பின்தேடிச் செல்லல்:

தலைவனும் தலைவியும் உடன்போக்கு மேற்கொண்டதால் தலைவியைத் தேடிச் செவிலி செல்வது ஆகும்.

இதன் வகை 9 ஆகும்.

4.2.3 மீட்சி: இலக்கணம்

1. உடன் போக்கில் சென்ற தலைவனைக் காணாமல் செவிலி மீண்டு வருதல்,
2. உடன்போக்கில் சென்ற தலைவனும் தலைவியும் மீண்டு வருதல்

ஆகிய இரண்டும் மீட்சி ஆகும்.

[மீட்சி - மீண்டு வருதல்]

4.2.4 மீட்சியின் வகைகள்: [4]

மீட்சி 4 வகைகளை உடையது. அவை;

1. தெளித்தல் (தெளிவித்தல்) – செவிலி நற்றாயையும், தலைவன் தலைவியையும் தெளிவித்தல்.
2. மகிழ்ச்சி – தலைவி தன் வரவைப் பாங்கிக்கும், பாங்கி நற்றாய்க்கும் உணர்த்துவதால் மகிழ்தல்.
3. வினாதல் – நற்றாய் வேலனை வினாதல்.
4. செப்பல் – முன் செல்வோர் பாங்கியருக்குச் சொல்லுதல்.

மீட்சியின் வகை: 6 ஆகும்.

4.3 வரைதல்: இலக்கணம்.

உடன்போக்குச் சென்று மீண்டு வந்து வரைதல் நிகழும். இந்நிகழ்ச்சி 1. உடன்போய் வரைந்து மீளுதல் 2. அவள் மனை வரைதல் 3. தன்மனை வரைதல் ஆகிய கிளவிகளை உடையதாகும்.

உடன்போக்கு இடையீடு: இலக்கணம்.

உடன்போக்கினை மேற்கொண்ட தலைவனையும் தலைவியையும்

சுற்றத்தார் பின் தொடர்ந்து செல்வர். இதனால் தலைவன் தலைவியை சுற்றத்தாரிடம் விட்டுவிட்டுத் தான் மட்டும் தனியே செல்வதால் உடன்போக்கு இடையீடு ஆகும்.

இதன் வகைகள் 4. விரி 6 ஆகும்.

## 4.3.1. வரைதலின் சிறப்பு:

தன் ஊர் வரைதல், தன்மனை வரைதல் இவை இரண்டும் நீங்கலாக, அந்தணரையும் சான்றோரையும் முன்னிறுத்தி வேண்டுவனவற்றைக் கொடுத்து வரைதல் உலகத்தின் இயல்பாகும்.

இதுவே தகுதியுடையதும் ஆகும்.

வினாக்கள்:

1. வரைவு — பொருள் கூறுக.
2. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
3. பூத்தரு புணர்ச்சி என்றால் என்ன?
4. கற்பொடு புணர்ந்த கவ்வை — விளக்குக.
5. மனைமருட்சி — விளக்குக.

# அலகு-5

# கற்பியல் மற்றும் ஒழிபியல்

# அலகு 5 - கற்பியல், ஒழிபியல்.

## 5.0 கற்பியல் : குறிப்பு.

களவு வாழ்க்கையில் கூடிய தலைவனும் தலைவியும் உலகோர் அறியும்படி திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவது கற்பாகும்.

இல்லற வாழ்வில் ஈடுபட்ட தலைமக்களுக்கு பெற்றோர், செவிலி, சான்றோர் முதலியவர்கள் நல்லொழுக்கங்களைக் கற்பித்தலால் கற்பு என்பது காரணப் பெயராயிற்று.

கற்பொழுக்கத்தின் இயல்புகளை எடுத்துரைப்பதால் கற்பியல் எனப்பெயர் பெற்றது. இவ்வியலின்கண் அமைந்த நூற்பாக்கள் 10 ஆகும்.

## 5.1 கற்பின் இலக்கணம் : [4]

இல்லற வாழ்வில் ஈடுபட்ட தலைவன், தலைவியின் கற்பு வாழ்க்கை பொலிவினைத் தருகின்ற சிறப்பினை உடையதாகும். இவ்வொழுக்கம்,

1. தலைவன், தலைவி இருவரும் புணர்தலால் உண்டாகும் மகிழ்ச்சி.
2. அம்மகிழ்ச்சி சிறக்கத் தோன்றும் ஊடல்.
3. ஊடலை உணர்த்தல்.
4. தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல்

ஆகிய செயல்களைப் பொருந்தியதாகும்.

### 5.1.1 கற்பிற்குரிய கிளவித்தொகை : [7].

சிறப்பு பொருந்திய கற்பொழுக்கம் 7 கிளவித்தொகைகளை உடையதாகும். அவை;

1. இல்வாழ்க்கை 2. பரத்தையிற் பிரிவு 3. ஓதல் பிரிவு 4. காவல் பிரிவு
5. தூதிற் பிரிவு 6. துணைவயிற் பிரிவு 7. பொருள்வயிற் பிரிவு

என்பனவாகும்.

### 5.1.2. 1. இல்வாழ்க்கை : இலக்கணம்.

தலைவன், தலைவி ஆகிய இருவரும் கூடி இன்பமுடன் இல்லறத்தில் வாழும் வாழ்க்கையின் சிறப்பினைக் கூறுவது இல்வாழ்க்கை ஆகும்.

வகைகள் : [4]

அ. தலைவனின் மகிழ்ச்சி ஆ. தலைவியின் மகிழ்ச்சி இ. தோழியின் மகிழ்ச்சி ஈ. செவிலியின் மகிழ்ச்சி என இல்வாழ்க்கை நான்கு வகையினை உடையதாகும்.

இல்வாழ்க்கையின் வகை : [10]

அ) கிழவோன் மகிழ்ச்சி – i) தலைவன் தலைவியின் பாங்கினைப் புகழ்தல்.

ஆ) கிழத்தி மகிழ்ச்சி – i) பெருமகள் (தலைவி) தான் வருந்தாது இருந்ததனை கூறுதல்.

இ) தோழியின் மகிழ்ச்சி – i) தலைவனைப் பாங்கி வாழ்த்துதல்.
ii) தலைவியைத் தோழி வினவுதல்.
iii) தோழி தலைவனிடம் வினாதல்
iv) தலைவியின் இல்லறச் சிறப்பைத் தோழி செவிலிக்கு உணர்த்தல்.
v) தலைவன், தலைவியரின் அன்புறவினை நன்றென்று தோழி செவிலிக்கு உணர்த்தல்.

ஈ) செவிலியின் மகிழ்ச்சி – i) தலைமகளின் கற்பொழுக்கத்தை நற்றாய்க்கு செவிலி உணர்த்தல்.
ii) மனைவாழ்க்கைச் சிறப்பைப் பற்றியும் நற்றாய்க்கு உணர்த்தல்.
iii) தலைவன், தலைவியரின் ஒத்த அன்புத் திறனையும் உணர்த்தல்.

5.1.3 அ) பரத்தையிற் பிரிவு : விளக்கம்

பரத்தைமேல் கொண்ட காதல் காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் பரத்தையிற் பிரிவாகும்.

வகைகள் : [4]

1. வாயில் வேண்டல் – தலைவியின் ஊடலைத் தீர்க்க தலைவியின் தோழியைத் தூதாக வேண்டுதல்.
2. வாயில் மறுத்தல் – தூதினை ஏற்காமல் தலைவி மறுத்தல்
3. வாயில் நேர்த்தல் – தூதினைத் தலைவி ஏற்கும்படி செய்தல்.
4. வாயில் நேர்தல் – தூதினை ஏற்றுக்கொண்டு தலைவி ஊடல் தீர்தல்.

ஊடல் வகைகள் :

பரத்தையின் காரணமாகத் தலைவன் பிரிந்து செல்வதால் தலைவி சினம் கொள்வாள். இதுவே ஊடல் எனப்படும். இவ்வூடல் 2 வகைப்படும்.

அவை; அ) உணர்த்த உணரும் ஊடல்
ஆ) உணர்த்த உணரா ஊடல்.

அ) உணர்த்த உணரும் ஊடல்:

வாயில்கள் எடுத்துச் சொல்லத் தலைவி ஊடல் தீர்வது உணர்த்த உணரும் ஊடல் எனப்படும்.

உணர்த்த உணரும் ஊடலுக்குரிய கிளவிகள் 11. ஆகும். அவை;

i) தலைவியின் ஊடலுக்குக் காரணம் பரத்தையிற் பிரிவே என்றல்.
ii) தலைவனின் பிரிவால் தலைவி வருந்துதல்
iii) தலைவியைப் பாங்கி வினவல்.
iv) தலைவனின் பிரிவினைத் தலைவி உணர்த்தல்.
v) பாங்கி தலைவியைக் கழறல்.
vi) தலைவி பூப்பு அடைந்ததைச் சேடி மூலம் தலைவனுக்கு உணர்த்த அதனைக் கண்டு அயல்மனையில் உள்ளவர் மனம் வருந்துதல்.
vii) தலைவியின் நிலையைச் செவ்வணி மூலம் உணர்த்தும் சேடியைப் பரத்தையர் பழித்தல்.
viii) செவ்வணி கண்டு பரத்தையர் வருந்த தலைவனைப் பரத்தையர் விடுக்க அவன் வரவைப் பாங்கியிடம் வாயில்கள் கூறுதல்.
ix) தலைமகன் வரவைத் தோழி தலைவிக்கு உணர்த்தல்.
x) தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்.
xi) தலைவனும் தலைவியும் புணர்ச்சியால் மகிழ்தல்.

<u>செவ்வணி</u>:

பிரிந்து இருக்கும் தலைவனுக்குத் தலைவியின் நிலை ஆடை, அணிகளின் வாயிலாக உணர்த்தப்படும். இதுவே அணி வழி உணர்த்தல் எனப்படும். அவ்வகையில் தலைவி பூப்பு அடைந்த நிகழ்ச்சி நடந்த பின்னர் மூன்றாம் நாள் நீராடுவாள். அந்நிகழ்ச்சியினைப் பரத்தையர் பார்த்த தலைவனுக்குச் செவ்வணி மூலம் உணர்த்துவர். இந்தச் செய்தி கண்டு தலைவன் தன் மனைக்கண் திரும்பி வருவான்.

இவ்வாறு தலைவியின் பூப்பு நிலையைத் தலைவனுக்கு உணர்த்தக் கைக்கொள்ளும் இம்முறையே செவ்வணி எனப்படும்.

ஆ) உணர்த்த உணரா ஊடல்:

ஊடலைத் தீர்க்க வாயில்கள் கூறும் சொற்களை ஏற்காமல் ஊடலைத் தலைவி நீட்டிப்பது உணர்த்த உணரா ஊடல் ஆகும்.

உணர்த்த உணரா ஊடலுக்குரிய கிளவிகள் 14 ஆகும். அவை;

i) தலைவி புதல்வனைப் பெற்றமையை <u>வெள்ளணி</u> வாயிலாக உணர்த்திய பொழுது தலைவன் வாயில் வேண்டல்

ii) தலைவியின் நிலையைத் தெரியாப் பாங்கி தலைவனுக்குக் கூறல்.

iii) தலைவன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தல்

iv) தலைவனின் வருகையைத் தோழி தலைவிக்கு உணர்த்தல்.

v) தலைவி ஊடல் கொள்ளல்.

vi) தலைவி தாய்மை மறுத்தல்.

vii) தலைவன் விருந்தினரோடு வந்தபொழுது தலைவி ஊடல் வாராது மகிழ்தல்

viii) பின் தலைவி ஊடல் வெளிப்படுத்த தலைவன் தலைவியின் அடி வீழ்ந்து வணங்குதல்.

ix) தலைவனின் இத்தன்மையைக் குற்றமாகப் பரத்தையர் அறிந்தனர் எனக் கூறுதல்.

x) தலைவன் அப்பரத்தையரைத் தெரியாது எனப் பொய்யுரைத்தல்.

xi) தலைவி அதனை மறுத்தல்

xii) தோழி தலைவியின் சினத்தைப் போக்குதல்

xiii) தணியாத தலைவியின் ஊடல் கண்டு தலைமகன் ஊடல் கொள்ளல்.

xiiii) தோழி தலைவனைப் பழித்தல்.

வெள்ளணி:

புதல்வனை ஈன்றெடுத்த தலைவி பதினைந்து நாள் கழித்து பதினாறாம் நாள் வெளியாவாள். இதனை வெள்ளணி வாயிலாகத் தோழி தலைவனுக்கு உணர்த்துவாள். இதனால் தலைவியின் மகப்பேற்று நிலையை உணர்ந்த தலைவன் வீடு திரும்புவான். இவ்வாறு தலைவியின் மகப்பேற்று நிலையை வெள்ளணி வாயிலாக உணர்த்துவதே வெள்ளணி எனப்படும்.

## 5.2. ஒழிபியல் : குறிப்பு

நம்பி அகப்பொருள் என்ற அக இலக்கண நூலில் அமைந்துள்ள 5 இயல்களில் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல் ஆகிய நான்கு இயல்களில் கூறா இனமான செய்திகளைப் பற்றிக் கூறுவதால் 5-வது இயல் ஒழிபியல் என்று அழைக்கப் பெறுகிறது. இவ்வியலில் 42 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

### 5.2.1 ஒழிபியலில் கூறப்படும் பொருள்:

அகப்பாட்டிற்கேற்ற உறுப்புகள், வகை, அமைப்பு ஆகியவற்றை ஆகியவற்றை உறுப்புகளாகக் கொண்டுள்ளது.

வழு - குற்றம் என்று கருதி இலக்கணத்திலிருந்து விலகியவை.

வழுவமைதி - வழு என்று கருதப்பட்டவற்றை ஏற்றுக்கொள்ளுதல்.

5.2.2. அகப்பாட்டு உறுப்புக்கள்: [12]

1. திணை 2. கைகோள் 3. கூற்று 4. கேட்போர் 5. இடம் 6. காலம். 7. பயன் 8. முன்னம் 9. மெய்ப்பாடு 10. எச்சம் 11. பொருள்வகை 12. துறை ஆகியன.

1. திணை :

அகத்திணையியலில் கூறப்பட்ட கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை ஆகிய ஏழும் திணை ஆகும்.

2. கைகோள் :

கைகோள் என்பது ஒழுக்கம் ஆகும். இவ்வொழுக்கம் அகத்திணையியலில் கூறப்பட்ட 1. களவு 2. கற்பு ஆகிய இரண்டும் ஆகும்.

3. கூற்று :

அகப்பாடல் பல இடங்களில் பேசுவதற்கு உரியவர் கூற்றுக்கு உரியவராவர். கூற்று என்ற சொல் இங்கு ஆகுபெயராய் அமைந்துள்ளது.

i) களவில் கூற்றிற்கு உரியோர் : [6]
1. தலைவன் 2. தலைவி 3. பார்ப்பான் 4. பாங்கன் 5. பாங்கி 6. செவிலி.

ii) கற்பில் கூற்றிற்குரியோர் : [7+6=13]
1. நற்றாய் 2. கண்டோர் 3. பாணன் 4. கூத்தன் 5. விறலி, பெதும்பை 6. பரத்தை 7. அறிவர்

ஆகிய எழுவரோடு களவிற் கூற்றிற்குரியோர் அறுவரும் ஆகிய பதின்மூவர் கற்பிற் கூற்றிற்குரியோர் ஆவர்.

iii) கூற்றுக்கு உரிமை அற்றோர் : [6]
1. தந்தை 2. உடன்பிறந்தோர் 3. வருத்தநோய் அறிவர் 4. ஊரவர் 5. அயலோர் 6. சேரியோர்.

இவர்களது கூற்றினை கூற்றிற்கு உரியோர் என்று மொழிதலும் உண்டு.

4. கேட்போர்:

ஒருவர் கூற அதனை செவிமடுப்போர் கேட்போர் எனப்படுவர். கூற்றிற்குரியோர் பதின்மூவருள் தலைவன், தலைவி, நற்றாய் ஆகிய மூவரும் நீங்கலாக பத்துப் பேர் கேட்போராவர்.

பார்ப்பான், அறிவர் ஆகிய இருவர் கூற்றையும் மேற்சொன்ன பதினொரு பேரும் கேட்பர்.

[தலைவன், தலைவி ஆகிய இருவரும் கூற்றிற்கு உரியோராவர். நற்றாய்க்குத் தலைவன் தலைவியரோடு கூற்று இல்லை.]

5. இடம்:

அகவாழ்க்கைக்குரிய செயல்கள் முறைப்பட நிகழ்வதற்குரிய இடம் எனப்படும். இடம் - நிலம்

6. காலம்:

செயல்பாட்டிற்குரிய பொழுதை அறிவிப்பது காலம் எனப்படும்.
அவை; 1. இறந்த காலம் 2. நிகழ்காலம் 3. எதிர்காலம்.

7. பயன்:

பொருளோ செயலோ அதனால் நிகழும் விளைவு பயன் எனப்படும்.

8. முன்னம்:

குறிப்பால் உணர்த்துவது முன்னம் எனப்படும்.
முன்னம் - குறிப்பு.

9. மெய்ப்பாடு:

கண்டோர், கேட்டோர் மெய்யாடத் தோன்றுவது மெய்ப்பாடு.
அவை; 1. நகை 2. அழுகை 3. இளிவரல் 4. மருட்கை 5. அச்சம் 6. பெருமிதம் 7. வெகுளி 8. உவகை.
இளிவரல் - இகழ்ச்சி

10. எச்சம்:

பொருள் முடிக்க வேண்டி நிற்பது எச்சம் எனப்படும்.

11. பொருள்வகை:

பொருள்கொள்ளும் முறையே பொருள்வகை எனப்படும்.

அவை; 1. நிரல் நிறை 2. மொழிமாற்று 3. சுண்ணமொழிமாற்று 4. அடிமறிமொழிமாற்று 5. பூட்டுவிற் பொருள்கோள் 6. யாற்றுநீர்ப் பொருள்கோள் 7. தாப்பிசைப் பொருள்கோள் 8. அளைமறிபாப்புப் பொருள்கோள் 9. கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

12. துறை:

கவிஞன் தன் கூற்றாகக் கூறுவது துறை எனப்படும்.

அகப்பாட்டினுள் வரும் பொருள்கள்: [2]

அ. உவமைப் பொருள் ஆ. இறைச்சிப்பொருள்.

உவமை வகை: [2]

அ. உள்ளுறை உவமம்:

உவமிக்கப்படும் பொருள் வெளிப்படையாகத் தோன்றாமல் மறைந்து வருவதே உள்ளுறை உவமம் எனப்படும்.

ஆ) வெளிப்படை உவமம்:

வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் வாயிலாக வெளிப்படும் உவமம் வெளிப்படை உவமம் எனப்படும்.

இறைச்சிப்பொருள்:

உள்ளுறைக்கு மேலாக வேறோர் பொருள் புலப்படுமாறு அமைவது இறைச்சியாகும்.

இறை - தங்குதல்.

இறைச்சிப் பொருள் கருப்பொருளை இடமாகக் கொண்டு பிறக்கும்.

திணை மயக்கம்:

ஒரு திணைக்கு உரிய பொருள் பிறதிணையுள்ளும் இடம்பெறுவதே திணை மயக்கம் எனப்படும்.

வினாக்கள்:

1. கற்பிற்குரிய இலக்கணம் தருக.
2. கற்பிற்குரிய பிரிவுகள் எத்தனை? அவை யாவை?
3. பரத்தையிற் பிரிவு - விளக்குக.
4. உள்ளுறை என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.
5. உணர்ந்து உணரும் உள்ளுறை என்றால் என்ன?
6. உணர்ந்த உணரா உள்ளுறை - விளக்குக.
7. முன்னம் - பொருள் கூறுக.
8. மெய்ப்பாடு என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? அவை யாவை?
9. அகப்பாட்டுறுப்பில் பொருள் வகை எத்தனை? அவை யாவை?
10. இறைச்சி என்றால் என்ன?

Seen